


**06. 07. 2025**

## தலைப்பு செய்திகள்

1. இந்தியா - பிரேசில் இடையே இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை பிரதமர் திரு.நரேந்திரமோடி பிரேசில் அதிபருடன் இன்றுமாலை மேற்கொள்கிறார்.

2. உலக அளவில் விரைவான வளர்ச்சி பெறும் மிகப்பெரிய நாடாக இந்தியா திகழ்வதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் மகளிர் உரிமை தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் நாளை முதல் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

4. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று நண்பகல் வினாடிக்கு 57 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

5. விம்பிள்டன் கிராண்ஸ்லாம் டென்னிஸ் கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, சீனாவின் **Xinyu** இணை இன்று களமிறங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

**பிரதமர்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி பிரேசில் ரியோடி ஜெனிரோவில் 17ஆவது பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக அங்கு சென்றடைந்தார்.

பிரேசில் வாழ் இந்தியர்கள் பிரதமருக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து பிரதமர் அந்நாட்டு அதிபர் லூயிஸ் இனாசியோ டாசில்வாவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

உலகளாவிய நிர்வாக சீர்திருத்தம், அமைதி, பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவின் முறையான பயன்பாடு, நிதி உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து உரையாற்ற உள்ளார்.

தொடர்ந்து பிரேசிலியாவில் வர்த்தகம், பாதுகாப்பு, விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகள் குறித்து அந்நாட்டு அதிபர் லூயிஸ் இனாஷியா டசில்வாவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக பல்வேறு நாட்டு தலைவர்களையும் பிரதமர் சந்தித்து பேச உள்ளார்.

*********

**நிர்மலாசீதாராமன்**

உலக அளவில் விரைவான வளர்ச்சி பெறும் மிகப்பெரிய நாடுகளாக இந்தியாவும் சீனாவும் திகழ்வதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக ரியோடி ஜெனிரோவில் பிரிக்ஸ் நாடுகளின் நிதியமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், உலகளாவிய வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தின் பெரும் சக்திகளாக இந்தியாவும் சீனாவும் திகழ்கிறது என குறிப்பிட்டார்.

பொருளாதார ஆளுமை, வளமிக்க மனித ஆற்றல், பாரம்பரியம், வலுவான நாகரீக தொடர்புகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் இருநாடுகளும் பரஸ்பர பிணைப்புகளை மேலும் வலுப்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக ரஷ்ய நிதியமைச்சர் ஆன்டன் ஸில்யூனாவுடன் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்த ஆலோசனைகளையும் திருமதி நிர்மலா சீதாராமன் மேற்கொண்டார்.

*********

**ஷியாம பிரசாத்**

சுதந்திர போராட்ட வீரரும் பாரதிய ஜன்சங் நிறுவனருமான டாக்டர் ஷியாம பிரசாத் முகர்ஜியின் 124ஆவது பிறந்த நாளை ஒட்டி பிரதமர் அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

டாக்டர் முகர்ஜியின் கொள்கைகள், வளர்ந்த மற்றும் தற்சார்பு இந்தியாவை உருவாக்க வழிநடத்துவதாக தமது சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளை ஒட்டி புதுதில்லியில் உள்ள அன்னாரது திருவுருவ படத்திற்கு மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் பேசிய அவர் இந்திய மொழிகளை பாதுகாக்க டாக்டர் முகர்ஜியின் கொள்கைகளின் அடிப்படையில் மத்திய அரசின் புதிய கல்வி கொள்கை அமைந்துள்ளதாக கூறினார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில் தேச ஒற்றுமைக்கான அன்னாரின் நிலைப்பாடு தன்னலமற்ற சேவை ஆகியவை மக்களை வழிநடத்துவதாக கூறினார்.

*********

**மொஹரம்**

இஸ்லாமியர்களின் மொஹரம் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி முகமது நபிகளின் பேரன், ஹஸ்ரத் இமாம், ஹுசைனின் தியாகத்தை நினைவு கூர்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

உண்மை மற்றும் தர்மத்தை நிலைநாட்டுவதில் இமாம் உசைனின் உறுதிபாட்டை அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவில் நடைபெற்ற சிறப்பு தொழுகை குறித்து எமது நாகை செய்தியாளர்

**வாய்ஸ்**

*********

**விலங்குவழி நோய் தடுப்பு**

விலங்குகள் வழியாக மனிதர்களுக்கு பரவும் ஜூனாடிக் நோய் தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்தியாவில் வரும் 2030ஆம் ஆண்டிற்குள் ரேபிஷ் நோயை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் தெரிவித்துள்ளது.

14 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் ரேபிஸ் தடுப்பூசியை கட்டாயம் செலுத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*********

**மகளிர் உரிமை தொகை**

தமிழகத்தில் விடுபட்டவர்களுக்கான மகளிர் உரிமை தொகை பெற விண்ணப்பங்கள் வழங்கும் பணி நாளை தொடங்கி மூன்றுமாதங்கள் நடைபெறும் என அரசு அறிவித்துள்ளது.

மாநிலத்தில் இதுவரை ஒருகோடியே 15 லட்சம் மகளிர் வங்கி கணக்குகளில் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நேரடியாக வரவு வைக்கப்படும் நிலையில் தகுதியுடைய விடுபட்டவர்களுக்காக இத்திட்டம் நீட்டிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்முதல்வன், வேலை வாய்ப்பு முகாம் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 63 ஆயிரத்து 949 மாணாக்கர் வேலை வாய்ப்பு,

முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 15 ஆயிரத்து 890 இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் திறன்பயிற்சி,

29 அரசு பொறியியல் கல்லூரிகளில் 30 கோடி ரூபாய் மதிப்பில் திறன் மற்றும் வேலை வாய்ப்பு மையங்கள்,

கல்லூரி கனவு திட்டத்தின் கீழ் நடப்பு கல்வியாண்டில் 81 ஆயிரத்து 149 மாணாக்கருக்கு உயர் கல்வி உள்ளிட்டவை உறுதி செய்யப்பட்டுள்ளதாக சென்னையில் இன்று வெளியான அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

*********

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் மாநில அரசின் திட்டங்கள் குறித்த குறைகேட்பு முகாமை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வரும் 15ஆம் தேதி தொடங்கிவைக்கிறார்.

நகர்புற மற்றும் ஊரக பகுதிகளில் இத்திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

அரசின் பல்வேறு நல திட்டங்கள், மகளிர் உரிமை தொகை உள்ளிட்டவற்றிற்கு பொதுமக்கள் இதில் கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம்.

இதற்கான தகவல் கையேடுகளை வீடுகளுக்கு நேரில் சென்று வழங்கும் பணி நாளை தொடங்கப்பட உள்ளது.

*********

**பெரியகருப்பன்**

தமிழகத்தில் கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்பட்டு வருவதாக இத்துறைக்கான அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சென்னை தீவு திடலில் சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம் குறித்த கூப்பத்தான் மினி மாரத்தான் போட்டிகளை இன்று தொடங்கிவைத்து பேசினார்.

**வாய்ஸ்**

கூடுவோம், ஒடுவோம் கூட்டுறவால் உலகை வெல்வோம் என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடைபெற்ற இப்போட்டியில் பல்வேறு பிரிவுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

அமைச்சர்கள் திரு.சேகர்பாபு, திரு.மா.சுப்பிரமணியன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

*********

**அமைச்சர்கள்**

அரியலூர் நகராட்சி பேருந்து நிலைய கட்டுமான பணிகளை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு ஆகியோர் இன்று நேரில் ஆய்வு செய்தனர்.

7 கோடியே 80 லட்ச ரூபாய் மதிப்பில் அனைத்து வசதிகளுடன் அமைக்கப்பட்டு வரும் இந்த பேருந்து நிலைய பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு அவர்கள் அறிவுறுத்தினர்

*********

**மேட்டூர்**

மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு இன்று வினாடிக்கு 50 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

கல்லணையிலிருந்து காவிரியில் 9 ஆயிரத்து 312 கன அடியும்,

வெண்ணாற்றில் 9 ஆயிரத்து 306 கன அடியும்,

கல்லணை கால்வாயில் இருந்து மூவாயிரத்து 808 கன அடியும்

கொள்ளிடத்தில் 2 ஆயிரத்து 392 கன அடியும் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 57 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

இதனிடையே மேட்டூர் அணை நிரம்பியுள்ளதை அடுத்து டெல்டா மாவட்டங்களின் கடை மடை பகுதிகளுக்கும் தண்ணீர் சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து நடப்பாண்டு பாசன பரப்பு மற்றும் மகசூல் அதிகரித்து விவசாயிகளின் பொருளாதாரம் மேம்பாடு அடையும் என வேளாண் துறை தெரிவித்துள்ளது.

*********

**வெடிவிபத்து**

விருதுநகர் மாவட்டம் சாத்தூரை அடுத்த கீழதாயில்பட்டி ஹிந்துஸ்தான் பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

காயமடைந்த 5 பேர் சிவகாசி அரசு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கவனக்குறைவால் இவ்விபத்து நேரிட்டதை அடுத்து ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாகவும்,

ஆலையின் உரிமம் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.

*********

**இருவரி**

**கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன்** மலைபகுதியின் மேம்பாட்டிற்காக தோட்டக்கலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வேளாண் திட்ட பணிகளை ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

**சமூக நல்லிணக்க ஊராட்சி விருதுபெற தகுதியுடைய** அரியலூர் மாவட்ட ஊராட்சிகள் நாளைக்குள்ளும்,

திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சிகள் வரும் 11-ம் தேதிக்குள்ளும் விண்ணப்பிக்கலாம் என அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

**தொழில்நெறி விழிப்புணர்வு திறன்வாரம் வரும் 9ஆம்** தேதி தொடங்கி 15ஆம் தேதி வரை கடைபிடிக்கப்பட உள்ளதை ஒட்டி சிவகங்கை மாவட்டத்தில் விழிப்புணர்வு

நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

**பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் கொட்டரை** கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் வரும் 9ஆம் தேதி நடைபெற உள்ளதால் இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

**திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர்** திருக்கோவில் நான்கு மாட வீதிகளில் நடைபெறும் சிமெண்ட் சாலை பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தர்ப்பகராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பணிகளை நேரில் ஆய்வு செய்த அவர் தீப திருவிழாவிற்கு முன்பாக மழைநீர் வடிகால், மின்புதைவட கம்பி அமைக்கும் பணிகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

**ஈரோடு மாவட்டத்தில் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு** விழிப்புணர்வு நடைபயணத்தை ஆட்சித்தலைவர் திரு.கந்தசாமி இன்று தொடங்கிவைத்தார்.

8 கிலோ மீட்டர் தூரம் நடைபெற்ற இந்த நடைபயணத்தில் கல்லூரி மாணாக்கர் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

*********

**கோவில்**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் குடமுழுக்கு விழா நாளை நடைபெறுவதை ஒட்டி பக்தர்களுக்கான அனைத்து அடிப்படை மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் இருந்து உலர் பழ மாலைகள் திருச்செந்தூருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

**சேலம் ஸ்ரீகோட்டை மாரியம்மன் திருக்கோவில்** திருத்தேர் கட்டுமான பணிகள் நிறைவடைந்ததை அடுத்து நாளை வெள்ளோட்டம் நடைபெறுகிறது.

*********

**டென்னிஸ்**

விம்பிள்டன் கிராண்ஸ்ஸ்லாம் டென்னிஸ் கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, சீனாவின் **Xinyu** இணை - **EL SALVADOR-**ன் **Marcelo** சீனாவின் **Shuai** இணையை இன்று எதிர்கொள்கிறது.

*********

**கிரிக்கெட்**

பர்மிங்ஹாமில் இந்தியாவிற்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 608 என்ற வெற்றி இலக்குடன் தனது 2-வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து நேற்றைய 4-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 72 ரன் எடுத்திருந்தது.

இங்கிலாந்து வெற்றிபெற மேலும் 536 ரன் எடுத்தாக வேண்டும் என்ற நிலையில் 5 ஆம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் இந்தியா 587. இங்கிலாந்து 407.

இரண்டாவது இன்னிங்ஸ் இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 427 ரன் டிக்ளேர்.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**